மாண்புமிகு எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கட்டிடம் கட்டுவதற்கான ஆணை 24—3—80ல் பிறப்பிக்கப்பட்டு, மேற்படி கட்டிடத்தை கோட்டாட்சி அலுவலகம் ஈரோடு மையப் பகுதியில் கட்ட வேண்டுமென்று முன்னால் ஏற்பாடு செய்யப்பட்டது. அது நெரிசல் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே மேற்கொண்டு கட்டிடம் கட்டினால், இன்னும் அதிக நெரிசல் ஏற்படும் என்று கருதிய காரணத்தினால், இப்போது அந்த இடம் மாற்றப்பட்டு, அங்கே கட்டப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கட்டப்பட்டு வருகிற கட்டிடம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு தனியாக கட்டப்பட்டு வருகிறதா? அல்லது வேறு அரசு அலுவலகங்கள் அதிலே இயங்குகின்ற அளவில் சேர்த்துக் கட்டப்படுகிறதா? அவ்வாறு கட்டப்படுமானால், எந்தெந்த துறைகள் அந்தக் கட்டிடத்தில் இயங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாகக் கட்டப்படும் அந்தக் கட்டிடத்தில், (1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (வருவாய்த் துறை), (2) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (அபிவிருத்தி பிரிவு), (3) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பின் தங்கிய வகுப்பினர் நலப் பிரிவு, (4) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் ஆதி திராவிட நலப் பிரிவு, (5) மாவட்ட உணவு வழங்கு அலுவலர், ஈரோடு, (6) கோட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு, (7) சமூக நல அலுவலர் அலுவலகம், ஈரோடு, (8) சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்ட அலுவலகம், (9) கோட்ட அபிவிருத்தி அலுவலர் அலுவலகம், ஈரோடு, (10) நில அளவு உதவி இயக்குநர் அலுவலகம், (11) வட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு, (12) மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (செய்தி, மற்றும் பொதுமக்கள் தொடர்பு) ஆகிய 12 அரசு அலுவலகங்கள் அங்கே இயங்கும்.

கதர் ரகங்களில் பாலியெஸ்டர் நூல் கலந்து நெசவு செய்யும் திட்டம்.

*வினா எண். 439— திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் ரகங்களில் பாலியெஸ்டர் நூல் கலந்து நெசவு செய்தது நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?

1982 மார்ச் 9]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) கதர் ரகங்களில் பாலியெஸ்டர் நூல் கலந்து நெசவு செய்வது நிறுத்தி வைக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

கால்நடை பராமரிப்பு கிளை நிலையங்களுக்கு வழங்கப்படும் மருந்துகள்.

*வினா எண். 440—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயங்கிவரும் கால்நடை பராமரிப்பு கிளை நிலையங்களுக்கு ஆண்டுக்கு அளிக்கப்படும் மருந்தின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அத்தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழகத்தில் மொத்தம் 2,301 கால்நடைப் பராமரிப்பு கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு கிளை நிலையத்திற்கும் ஆண்டு தோறும் 1,500 ரூபாய் வரை மருந்துகள் வாங்கி உபயோகிக்க அனுமதி வழங்கப்படுகிறது. 1980-81ம் ஆண்டில் இக்கிளை நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் வாங்குவதற்கு 23,24,935 ரூபாய் மொத்தம் ஆகியிருக்கிறது.

(ஆ) ஒவ்வொரு கிளை நிலையத்திற்கும் ஆண்டு தோறும் மருந்துகள் வாங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,500 ரூபாய் நிதி வரம்பை உயர்த்த வேண்டிய நிலைமை தற்போது ஏற்படவில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய கால்நடை கிளை மருத்துவமனைகளிலே. கால் நடைகளுக்கு சித்த வைத்திய முறை அளிக்கப்படுகிறதா? உயிர் காத்தல் மருந்தைத் தவிர, மற்ற எல்லா மருந்துகளும் சித்த வைத்திய முறையில் அதாவது சுக்கு, காசிக் கட்டி போன்ற சித்த வைத்திய மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, தமிழகத்திலே எல்லா கால்நடை மருத்துவமனைகளிலும் சித்த வைத்திய மருத்துவ முறையை அளிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?